


நீர் மேலாண்மைக்கு மிகுந்த முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு வரும் இத் தருணத்தில், தன்னுடைய 35 ஆண்டுகளின், நீர் மேலாண்மை ஆராய்ச்சி அறிவியல் அனுபவங்களின் பிரதிபலிப்பாக, 37 கட்டுரைகளின் தொகுப்பை நூல் வாயிலாக, விவசாயிகள் மற்றும் பொதுமக்கள் பயன்பாட்டிற்காகவும் தக்க தருணத்தில் வெளியிட்டதற்கு, பேராசிரியர் கி. சிவசுப்பிரமணியன் அவர்களுக்கு எனது பாராட்டுதலையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்ளுகின்றேன். மேலும் இந்நூல், முக்கியமாக சமூக, விஞ்ஞான ஆராய்ச்சியாளர்களுக்கும், நீர் மேலாண்மை துறைசார்ந்த அரசாங்க அதிகாரிகளுக்கும், கொள்கை முடிவெடுக்கும் அரசியல்வாதிகளுக்கும், விவசாயப் பெருமக்களுக்கும் மற்றும் பொது மக்களுக்கும் பயனுள்ளதாக அமையும் என்பதில் ஐயமில்லை. (பேராசிரியர் **டாக்டர் ப. நம்மாழ்வார்** அவர்களின் அணிந்துரையிலிருந்து.)

**கி. சிவசுப்பிரமணியன்,** சென்னை வளர்ச்சி ஆராய்ச்சி நிறுவனத்தில் பேராசிரியராகப் பணியாற்றியவர். ஏரிப்பாசனத்தில் முனைவர் பட்டம் பெற்றவர். இவர் ஆங்கிலத்தில் 33 ஆய்வுக் கட்டுரைகளையும், தமிழில் இப்புத்தகத்தில் உள்ள கட்டுரைகளையும், பல புத்தகத் திறனாய்வுகளையும் எழுதியுள்ளார். மத்திய மாநில அரசுகளால் செயல்படுத்தப்பட்டு வரும் வறட்சிக்கு இலக்காகும் பகுதிகள் திட்டம் மற்றும் ஒருங்கிணைந்த தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்தில் 23 மதிப்பீட்டு அறிக்கைகளை அரசுக்கு அளித்துள்ளார். உலக வங்கியின் நிதியுதவியுடன் செயல்படுத்தப்பட்ட நிலவள மற்றும் நீர்வள திட்டத்தில் (IAMWARM) 3 ஆண்டுகள் கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டு வல்லுனராக பணியாற்றியுள்ளார்.